உ

ஸ்ரீவாணி சகாயம்.

# கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தி[ ]ரும் வெளிவரும்

மாதப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபெறநில்.

வெண்டாமரை ௭. } 1919-ம் ஆ மார்ச்சு மீ { இதழ் ௩.

## திருக்குறள் வியாசம்.

௧௬-ம் அதிகாரம்.

### பொறை யுடைமை.

உள்ளுறை:—(1) பொறையுடைமை யென்பது. (2) பொறை யுடைமையின் சிறப்பு. (3) பிறர் செய்த குற்றங்களைப் பொறுத்தல். (4) பிறர்சொல்லிய குற்றங்களைப் பொறுத்தல். (5) முடிவுரை.

### விளக்கம்.

காரணம் பற்றியாவது, அறியாமையினாலாவது ஒருவன் தமக்குத் தீங்குசெய்த விடத்து, தாமும் அதனை அவனிடத்துச் செ[ ]த்தலுடைய ராதலே பொறையுடைமை யென் [ ]ம்.

[ ]யுடைமையின் சிறப்புப் புகலுதற்கரிது. [ ]ச் சிறந்த அறமாகும். உலகில் சிலர், தமக்கு [ ] செய்தால், அதற்குப் பிரதியாகத் தாமும் [ ]தசெய்கின்றனர். அவன் குற்றம் கூறினல்

தாமும் குற்றங் கூறுகின்றனர். இஃது அறமாமோ? * 'தன்னை வெட்டுவோரை வீழாமற் சுமக்கும் நிலத்தைப்போல, தம்மை அவமதிப்பவரைப் பொறுத்தல் முதன்மையான அறம்' என்று ஆன்றோர் அறைகின்றனரே. ஆகலின் பிறர்செய்த குற்றங்களைப் பொறுத்துக்கொள்ளுதலே நன்மையாகும். இங்ஙனம் †'பொறுத்தல் நன்றாதலால், தா[illegible]றுத்தற்கு (தண்டித்தற்கு) இயன்ற காலத்தும் பிறர் செய்த [illegible]கயை (தீச்செயல்களையும் தீச்சொற்களையும்) பொறுக்கக்கடவர்; அதனை மனத்துட் கொள்ளாது அப்பொழுதே மறத்தல் பெறின், அப்பொறுத்தலினும் நல்லது.' ஏனெனில், பொறுக்கும் போதும் அக்குற்றங்கள் உட்கொள்ளப் படுகின்றன. அப்பொழுதே மறத்தலால் அஃதும் இல்லையன்றோ. மேலும், மக்கட்கு வல்லமை எதுவென்று பார்க்குமிடத்து மற்றவையெல்லாம் உண்மையில் வல்லமை யல்ல. பிறர் செய்த தீமையைப் பொறுத்துக் கொள்ளுதலே வல்லமையாகும். ஆனது பற்றியே, ‡'ஒருவனுக்கு வறுமையுள் வறுமையாவது விருந்தினரை ஏற்றுக்கொள்ளாது நீக்குதல்; அதுபோல வல்லமையுள் வல்லமையாவது அறிவின்மையால் தீங்குசெய்தவரைப் பொறுத்தல்' என்று உவமை வாயிலாக உரைத்தனர் உயர்ந்தோர். எப்படி [illegible]ருந்தினரை உபசரியாமை பொருளுடைமை யாகாதோ அப்படியே அறிவிலாரைப் பொறுக்கல் இளைத்தலாகாது வல்லமையாமென்க. அன்றியும் பொறுமை யில்லையேல் மக்கட்குக் குணநிறைவு எப்படி யுண்டாகும்? அப்போழ்து அவர்கள் சான்றோராவதெப்படி? குணங்களால் நிறைந்தவரன்றோ சான்றோர். ஆகலின், §'ஒருவன் சால்பு (குணநிறைவு) உடைமை தன்னைவிட்டு

---

* அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை.

† பொறுத்த லிறப்பினை யென்று மதனை…
மறத்த லதனினு நன்று.

‡ இன்மையு ளின்மை விருந்தொரால் வ…
வன்மை மடவார்ப் பொறை.

§ நிறையுடைமை நீங்காமை வேண்டிற்…
போற்றி யொழுகப் படும்.

நீங்காமையை வேண்டுவானாயின், அவனால், 'பொறுமையுடைமை, தன்கண் அழியாமற் காத்து நடக்கப்படும்.' எனவே பொறுமையில்லார்க்கு நிறைவில்லை யென்பது நன்கு பெறப்படுகின்றதன்றோ.

இனிப் பிறர்செய்த குற்றங்களைப் பொறுத்துக்கொள்வது பற்றிச் சிறிது ஆராய்வோம். ஒருவன் நமக்குச் செய்த தீமைக்குப் பிரதியாக நாமும் அவனுக்கு ஒரு தீமை செய்யின் அவனுக்கும் நமக்கும் என்ன வேற்றுமையுளது? அவன்போலவே நாமும் குற்றஞ்செய்தவ ராகின்றோம். அப்போது அவனைவிட நமக்கு உயர்வு எப்படி யுண்டாகும்? குற்றத்தைப் பொறுத்துக்கொண்டவர்க்கே உயர்வுண்டாவது உலக அனுபவம். ஆதலின், *'பிறன் தமக்குத் தீங்குசெய்த விடத்து, பொறாமல் அவனை வருத்தினவரை அறிவுடையோர் ஒருபொருளாக மனத்துட் கொள்ளார்; அதனைப் பொறுத்தவரைப் பொன்னைப்போல் இடைவிடாது மனத்துட்கொள்வர்.' சால்புடைமைபற்றி எப்போதும் நினைப்பரென்க. மேலும், †'தமக்குத்தீங்குசெய்தவனை ஒறுத்தவர்க்கு (வருத்தினவர்க்கு) உண்டாவது அவ்வொருநாளையின்பமே; அதனைப்பொறுத்தவர்க்கு உலகமழியுமளவும் புகழுண்டாம்.' அவ்வொருநாளையின்பமும் உண்மையான இன்பமா? அல்ல அல்ல. நினைத்து முடித்தமென்று தருக்கியிருக்கும் பொய்யின்பமே. தம்மை இகழ்ந்தமைக்குத் தாங்கள் பொறுப்பதுமன்றி, 'எம்மை இகழ்ந்த தீவினைப்பயனால் மறுமையில் இவர்கள் எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல்' என்று இரங்குவதும் சான்றோர் கடன் ஆதலினாலே, ‡'செய்யத் தகாத கொடியவற்றைத் தன்னிடத்துப் பிறர்செய்தாலும், அவர்க்கு அதனால் வரும் துன்பத்திற்கு நொந்து, தான்

---

* ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

† ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

‡ திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று.

அறமல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல் ஒருவனுக்கு நல்லது.' அங்ஙனமன்றி நாமும் அவரிடத்துத் தீயவற்றைச் செய்வோமேல் நமக்கு வருவது தோல்வியே. ஒருநாளும் வெற்றியடைய மாட்டோம். அவ் வெற்றியாவது எது? அவரினும் மேம்பட்டு விளங்குதலன்றோ? அவ் வெற்றி பொறுமையினாலேயே கிடைக்கக் கூடியது. ஆனது பற்றித்தான், * 'மனச்செருக்கினாலே தம்மிடத்துத் தீயவற்றைச் செய்தாரைத் தாம் தம்முடைய பொறுமையினாலே வென்றுவிடக்கடவர்' என்றார் பொன்றாப் புகழ் படைத்த சான்றோர்.

இன்னும் பிறர்செய்த குற்றங்களைப் பொறுத்தல்போலவே பிறர் குற்றமாகச்சொல்வதையும் பொறுத்தல்வேண்டும். † 'நன்னெறியைக் கடந்தவரது வாயினுண்டாகும் தீய சொற்களைப் பொறுப்பவர், இல்வாழ்க்கையிலே யிருந்தும் துறந்தவர்போலத் தூய்மை (மனமாசின்மை) யுடையவராவர்.' அறிவில்லாதவர் கூறும் தீய சொற்களைப் பொறுப்பவரது பெருமை என்னே! அவர் பொதுவகையால் மக்களில் ஒருவராக வைத்தெண்ணப்படுவரோ? ‡ 'விரதங்களினால் உணவைத் தவிர்ந்து உற்ற நோயைப் பொறுப்பவர் எல்லாரினும் பெரியராவர்; அவர் பெரியராவது, தம்மைப் பிறர்சொல்லும் வெறுக்கப்படுஞ் சொற்களைப் பொறுப்பவரின்பின்' என்க. பொறுக்கக்கூடாமைக்கு ஏதுவாகிய இருவகைப் பற்றுக்களோடிருந்தே பொறுத்தலால், தவஞ்செய்வாரினும் இவர் பெரிய ராவரென் றுணர்க.

இதுகாறுங் கூறியவாற்றால், பிறர்செய்த தீமையைப் பொறுத்துக்கொள்வதே பொறையுடைமை யென்பதும், தம்மை

---

* மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்.

† துறந்தாரிற் றூய்மை யுடையா ரிறந்தார்வா
யின்னாச்சொ னோற்கிற் பவர்.

‡ உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு
மின்னாச்சொ னோற்பாரிற் பின்.

யிகழ்வாரைப் பொறுத்தலே தலைமையான அறமென்பதும், பிறர் செய்த குற்றத்தை அப்பொழுதே மறத்தல்வேண்டு மென்பதும், அறிவிலார் செய்த குற்றத்தைப் பொறுத்தலே ஒருவனுக்குச் சிறந்த வல்லமையென்பதும், பொறுமையில்லார்க்கு நிறைவில்லை யென்பதும், பொறுமையில்லாதவரைப் பெரியோர் பொருட்படுத்தாரென்பதும், பொறுத்தவர்க்கே என்றும் புகழுண்டா மென்பதும், எப்போதும் அறமல்லாதவற்றைச் செய்ய லாகா தென்பதும், தீமை செய்தவர்களைப் பொறுமையினால் வெல்ல வேண்டுமென்பதும், பொறுப்பவர் மனத்தூய்மை யுடையவராவ ரென்பதும், அவர் தவஞ்செய்வாரினும் பெரிய ராவரென்பதும், பிறவும் பெறப்பட்டன.

---

## ஆயுர்வேத வைத்தியப் பகுதி.

### சுக்கு.

(வெண்டாமரை எ, இதழ் உ, 32-ம் பக்கத்தொடர்ச்சி.)

17. தோல் போக்கிய சுக்கு பலம் ஒன்று, மேல் காடான பாகத்தை நீக்கிய மிருதுவான பூவரசன்பட்டை பலம் கால், பூநீக்கிய லவுங்கம் பலம் கால், ஏலக்காய் பலம் கால், மான்கொம்பைச் சீ[illegible] தூள் பலம் கால். இவற்றுள் மேல் நான்கையும் சற்று நறுக்கி ஒன்றாய்க் கூட்டி, வழுக்கைபற்றாத இளநீர்ஜலம் படி ஒன்றுவிட்டு மண்பாத்திரத்தில் கியாழம் செய்து கால்படியாகச் சுண்டவைத்துக்கொண்டு, காலை, பகல், மாலையாகத் தினம் மூன்றுமுறை சாப்பிட்டுவர, கைகால் பிடிப்பு, கீல்வாயு, இடுப்புக்குடைச்சல், மார்வலி, நெஞ்சுகபம், கழுத்துநரம் பிழுப்பு, முதுகுதண்டுவலி, துடைகளின்வலி தீரும். இக் கியாழத்தைச் சாப்பிடுகையில் சற்றுச் சுடவைத்துச் சுண்டக்காயளவு பசுவின் வெண்ணெய் அல்லது எருமை வெண்ணெய் சேர்த்துச் சாப்பிடவேண்டும். வெண்ணெய் கிடைக்காத சமயங்களில் நெய்சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் வெண்ணெயே முக்கியம். அதிலும் பசுவின் வெண்ணெய்தான் சர்வசிலாக்கியமானது.

#### குறிப்பு.

கியாழங்களை இரண்டாமுறை சூடுகாட்டினால் விஷத்திற்கொப் பாகுமென வைத்தியசாஸ்திரங்கள் கூறுகிறக்கும். இது உண்மையும்

அநுபவசித்தமானதாம். ஆனால் சிற்சில கியாழங்கள் அதில் சேரும் சரக்குகளின் வன்மை மென்மைகளுக்கும், தேகத்திற்கும், ரோகத்திற்கும் தக்கபடி காய்ச்சியும், காய்ச்சாமலும் உபயோகிக்கும்படி வைத்திய நூலாசிரியர்களாகிய அந்த மகான்களே கிருபைகூர்ந்தருளி யிருப்பதால், சமயத்திற் கேற்றவாறு செய்துகொள்ள வேண்டியது நமது கடமை. எனவே சுடுகாட்ட வேண்டியதாய்ச் சொல்லுமிடங்கள் தவிர மற்று எந்தக்கியாழங்களையும் இரண்டாம்முறை அடுப்பில் வைத்துக் காய்ச்சக்கூடாதென்பது முக்கியகுறிப்பு.

18. தோல்போக்கிய சுக்கு பலம் ஒன்று, இதைப் பஞ்சுபோல் நறுக்கி ஒருமண்சட்டியில் போட்டு அடுப்பில்வைத்து எரித்துவர, சுக்கு வெந்து சாம்பலாகும். நன்றாய்ச் சாம்பலானபின், கறிவேப்பிலை பலம் கால், சீரகம் பலம் கால், கொத்துமல்லிவிதை பலம் கால், புளியங் கொட்டை தோலுடன் தூள்செய்தது பலம் கால். இவற்றை ஒன்றாய்க் கலந்துபோட்டுச் சற்று வறுத்து, புளித்த பசுவின்மோர் படி ஒன்று விட்டு அரைக்கால் படியாகச் சுண்டக் காய்ச்சிக்கொண்டு, காலை மாலை அரைப்பலம் வீதம் ஆகாரத்தின் முன்சாப்பிட்டுவர, தேகச்சூடு, தேக அழலை, மார்வலி, குடல்வாயு, பித்தவாயு, வாய்நீர்ஊறல், தலைமயக்கம், வாயின் மேல்அண்ணத்திலும் நாவின் அடியிலும் உண்டாகும் உஷ்ண மிகுதியாலான ஓர்வித குழகுழப்பு, வாய்க்கசப்பு, ஆகாரத்தில் வெறுப்பு, அக்கினிமந்தம், ஆசனக்கடுப்பு, மூலச்சூடு, உஷ்ணத்தால் அடிக்கடி மலம்போதல், சிறு குழந்தைகளுக்குக் காணும் வயிறுகொட்டல், குதுக் குதுக்கென்று மலம்போதல் தீர்ந்து உஷ்ணந்தணிந்து சுகந்தரும்.

19. தோல்போக்கிய சுக்கு பலம் கால், மேல்தோலும் உள் நரம்பும் நீக்கிய சீந்தில்தண்டு பலம் கால், இவ்விரண்டையும் ஒன்றிரண்டாய்த்தட்டிச் சற்று வறுத்துக்கொண்டு, முத்தக்காசு என்னும் கோரைக்கிழங்கு பலம் கால் வறுக்காமல் சற்று நறுக்கியும் ஒன்றாய்க் கூட்டி மண்பாத்திரத்தில்போட்டு ஒருபடி ஜலம் விட்டு அரைக்கால்படியாகச் சுண்டக்காய்ச்சி, காலை, பகல், மாலையாக, தினம் மூன்றுமுறை சாப்பிட்டுவர, மாந்தசுரம், குளிர்சுரம், விடாச்சுரம், விஷசுரம், பித்த சுரம், இரவில்மாத்திரம் வரும் சுரம் முதலியன தீரும்.

20. தோல்போக்கிய சுக்கு பலம் ஒன்று, விஷ்ணுகாந்தி சமூலம் பலம் அரை, வெள்ளைக் காக்கணம் (காக்கட்டான்) வேர்ப்பட்டை பலம் அரை, விதை, உள்நரம்பு நீக்கிய ரோஜாமொக்கு (குலாபூ) பலம்அரை, இந்நான்கும் தனித்தனி சிறுத்துக்கொண்டு ஒரு மண்பாத்

திரத்தில் போட்டு ஒருபடி ஜலம் விட்டுக் கால்படியாகச் சுண்டவைத்துக் கொண்டு காலை, பகல், மாலையாக அரைப்பலம் வீதம் சாப்பிட்டுவர, மலபந்தசுரம், வாதசுரம், சிலேத்மசுரம் தீரும்.

சில தேகிகளுக்கு மறுநாள் முதல் ஒன்றிரண்டுமுறை மலம் போகும். சிலதேகிகளுக்கு மலம்போகாமல் தேகத்திலூறிக் குணம்செய்யும். மலம் போகவேண்டுமானல் கியாழத்தின் அளவை அதிகப்படுத்தியும், மலம் கட்டவேண்டுமானால் அளவைக் குறைத்தும் உபயோகித்து வரவேண்டும்.

21. தோல்போக்கிய சுக்கு பலம் கால், கொட்டைக் கரந்தைச் செடியின் இலைமாத்திரம் பலம் கால், சீரகம் பலம் கால், மூன்றும் தனித்தனிவறுத்து, சுக்கைமாத்திரம் நறுக்கி மூன்றும் சேர்த்து மண் பாத்திரத்தில் ஒருபடிஜலம் விட்டுக் கொதிக்கக்காய்ச்சி அதில்போட்டு அரைக்கால்படியாகச் சுண்டவைத்துக்கொண்டு காலை, மாலை தினம் இருவேளை கால்பலம் கியாழத்தில் கொஞ்சம் சீனிசர்க்கரை சேர்த்துச் சாப்பிட்டுவர, குடலில் தங்கியவாயு, இடுப்புவாயு, குடல்இரைச்சல், தொடைகளின்வலி, பெண்களின் விலாப்பக்கத்தவலி, பிரசவ அழுக்கு, பிரசவத்தின் பின்காணும் கழுத்து நரம்பிழுப்பு முதலியன தீரும். தேகத்திற்கும் ரோகத்திற்கும் ஏற்றவாறு கால்பல கியாழத்தை அரைப்பலமாகவும், இரண்டுவேளையை மூன்றுவேளையாகவும் மாற்றிக்கொள்ளலாம்.

இந்தக் கியாழத்திலேயே கால் பலம் எடுத்து அதில் கடுகத்தனை கோரோஜனையும், மிளகத்தனை குங்குமப்பூவும் உயர்ந்தவைகளாக இழைத்துக் குழந்தைகளுக்குக் கொடுத்துவர, மார்ச்சளி, கபம், நெஞ்சில் தூக்கத்தின்போதும் மற்றவேளையிலும் கர்முர் என்னும்சப்தம், மாந்தம், வயிற்றுப்புளிப்பு, மலத்தின்வெளுப்பு, இதனால் உண்டாகும் சிறுபூச்சிகளும்தீரும்.

இப்படியே தாய்க்குக் கொடுத்துவர, தாயின் தேகவலி, குத்தல், குடைச்சல், தலைப்பாரம், மார்பில்தங்கும் வாயு, அடிவயிற்றுவேதனை, விலாப்பக்கத்து வலி, வயிற்றுப் பொருமல் தீரும்.

(இன்னும் வரும்.)

அ. வேங்கடாசல முதலியார்,
ஆயுர்வேத வைத்தியர்,
திருவண்ணாமலை.

## பொய்யாமொழிப் புலவர் சரிதம்.

(வெண்டாமரை எ, இதழ் உ, 35-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதுகேட்ட வேடுவராகிய குறிஞ்சிநிலக் கடவுள் உள் மகிழ்ந்தனராயினும், வெளிப்பட்ட புன்னகையினராய் நகைத்து, இச்செய்யுளில் சொற்குற்ற மிலவாயினும் பொருட் குற்றமுள்ளது-யாங்ஙனமெனில், சதுரக்கள்ளிச் செடிகள் எரிந்து பொறிபறக்கும் பெருநெருப்பு மிக்க காட்டினிடத்தே சிறு நெருப்பிற்குத்தானும் வெந்து சாம்பராகும் வேலமாத்துமுள் காலில் தைப்பது இசையுமோ? என்று கூறி, நான் பாடுகின்றேன் என்று, அக்கவியில் அவர் பெயரும், பாலை வருணனைகளும், உரிப்பொருளும் அமைய, நீ குற்றக்துட் டவறி விழுந்தனை யென்னும் குறிப்புந்தோன்ற, புலவர் பாடிய அச் சுரம்போக்குத் துறையிலேயே, "விழுந்த மழைத்துளி ஆகாசத்திற்றானே வேகுமெனவும், தவறிக் கீழே விழுமாயின் தீச்சுடர் போல் கிளம்பிச் சுடுமெனவும் எக்கமுற்றுச் செழுமை வாய்ந்த மேகங்கள் மழை பெய்யாத பாலைவனத்தில் பொய்யாமொழிப்புலவனது பகைவரைப்போல் வளையலை யணிந்த என் பெண்ணும் போயினள் என்ன அநியாயம்" என்னுங்கருத்துத் தோன்ற,

விழுந்ததுளி யந்தரத்தே வேமென்று வீழ்ந்தால்
எழுந்து சுடர்வருமென் றேங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தே பெய்வளையும் போயினளே
பொய்யா மொழிப்பகைஞர் போல்.

(தமிழ் நாவலர் சரிதை.)

எனப் பாடினர். கேட்ட புலவர் வியப்படைந்து நிற்க, முருகவேள் கோழியைப்பாடிக் குஞ்சையுமா பாடுவது என்று கூறிய முன்னைய நினைவு வரச் செய்து புலவரை ஆசீர்வதித்துத் தமது உண்மை உருவத்தைக்காட்டி அவர் வழியிளைப்பையும் மாற்றி, பொய்யாமொழியார் நாவில் தம் வேலா லெழுதி அநுக்கிரகித்து மறைந்தருளினர். இதனை அருணகிரிப் பெருந்தகையாரும்,

"முற்றித்திரி வெற்றிக் குருபா
முற்பட்ட முரட்டுப் புலவனை
*முட்டைப் பெயர் செப்பிக் கவிபெறு பெருமாளே"

---

* காளமேகப்புலவர் கூறிய துறை.

" துட்டப் பயல்பிது ராச்சிரம் வைத்திடுந் தொண்டன் மகன்
ஒட்டச் சிறுக்கி நலங்கிடை யாள்பெற்ற ஒமுடிவான்

" முற்பா டப்பா டற்றா ருக்கோர்
* முற்கா டற்காப் பொருளீவாய்"
" வாய்ப்புற் றத்தமிழ் மார்க்கத்திட் பொருள்
வாய்க்குச் சித்திர முருகோனே" (91)

" (1) கற்றாவிற் காட்டிக் (2) கரைதுறை (3) நற்றாயிற்காட்டிப் புகழ்
(4) கலைகற்றோர்சொற் கேட்கத் தனிவழி—வருவோனே" (4?1)

எனத் தமது திருப்புகழில் பலவிடத்தும் வியந்து பாடியுள்ளார்.
**மார்க்க சகாயதேவரும்,**

பொய்யா மொழிப்புலவர் மதுரையிற் சங்கம்
புரக்கவெழு நாள் மறவனுய்ப்
புறவுற வளைத்தெனது பெயர் † முட்டை பாடெனப்
பொன்போலு மென்று பாட
வெய்யான பாலைக்கி தேலாது நின் பெயர்
விளம்பென விளம்ப வவர்மேல்
'விழுந்ததுளி' யென்றெடுத் துப்பாடி யவர்நாவில்
வேல்கொடு பதித்த சதுரா.

(திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்)

என்று இச்சம்பவத்தைக் குறிப்பிட்டனர்.

---

குட்டப் பிணியுண் டயலார் தரவுணுங் கூன்வயிறன்
முட்டைக்கு மூத்தவன் றூங்கன் முகவன் என்முன்னிற்கவே."

துட்டு அப்பு—துளிஜலம்; அயல்பிதுராது சிரம் வைத்தவன்—ஈசன்; ஒட்டச்சிறுக்கி—பாகங்கலந்தவள்; நலங்கிடையாள்—நையுமிடையாள்; முட்டை—பொய்யா மொழிப்புலவர் கூறிய மானவேன்முட்டை என்ற கவியின் கருத்து. (இது எட்டுப்பிரதியிற் கண்டது.)

* முற்பாடு அற்க—முற்பாடு நீங்க

(1) கல்தாவில்காட்டி—மலையையொத்த வலியுள்ள வில்லைக்காட்டி.

(2) கரைதுறை—சொல்லுகின்ற துறையை.

(3) நற்றாயில் காட்டிப்புகழ்—நற்றாயிரங்கலாகப் " பொன் போலுங் கள்ளி" என்றெடுத்துக் காட்டிப் புகழ்ந்த.

(4) கலைகற்றோர்—பொய்யா மொழிப்புலவர்.

† 'முட்டை' என்று கூறியது இடுகுறியாக்க மென்பார் நன்னூல் விருத்திக்காரர். (பெயர் சூத்—17 உரை.)

குமரவேள் இங்ஙனம் தம்மை வலியவந்து தடுத்தாட்கொண்டு அருள்சுரந்து காட்சி தந்தமையை நினைந்து நினைந்து பெரு மகிழ் வெய்தி மார்க்கத்தினுள்ள சிவதலங்களை யெல்லாம் தரிசித்துக் கொண்டு,

“மானமா மாடப்பிடி வன்கையா லலகிடக்
கானமார் கடகரி வழிபடுங் கானப்பேர்”

எனத் தேவாரத்தாற் சிறப்பிக்கப்பெற்ற ‘காளையார் கோயிலை’ அடைந்தனர். இவர் காளையார் கோயில் சேர்ந்த சமயம் மாலைக் காலமும், நிசிவேளையுமானதால், பசியால் மிகவாடி ‘கூத்தாள்’ என்னுந் தாசி வீடு சென்று தமக்குற்ற பசிப்பிணியை நிவர்த்திக்குமாறு தெரிவிக்க, அவளும் அவள் தமக்கையும், தாயும், பாட்டியும் பூர்வத்திற் செய்த பாவத்தினால் குருட்டுத்தன்மையை அடைந்திருந்ததினால், புலவரை இன்னாரெனத் தெரிந்து கொள்ளமாட்டாமல் நீவிர் யாவரெனக் கேட்டனள். புலவர் பொய்யாமொழி யென்றனர். கூத்தாள் பெரிது மதிசயித்து நெடுநாள் விரும்பி எதிர்பார்த்திருந்த தொரு அரிய பொருள் திடும்பிரவேசமாய் வலுவில் தம் வீடு தேடி வருமாயின் அதனைக் காண்பானுக்கு எவ்வளவு வியப்பும் ஆனந்தமும் உண்டாகுமோ அதிலும் பதின்படங்கு சந்தோஷங்கொண்டு இவரைத் தக்கபடி உபசரித்து விருந்திட்டு அவர் பாதங்களில் சாஷ்டாங்கமாக நிலந்தோயப் பன்முறை வீழ்ந்து தன்னுடையவும், தன் முன்னோருடையவும் ஆகிய குறையைக்கூறி முறையுமிட் டிரந்தனள். புலவர் விஷய முணர்ந்து அவர்கள் விஷயத்தில் மன கிரங்கி,

“கூத்தாளென்னும் பெயருடைய இவள் கண்கள் நீண்டதான கூரிய வேல் போல் ஆகுக; கூத்தாளுக்கு மூத்தவள் கண்கள் முழுத்த நீலோற்பல மலர் போல் ஆகக்கடவன; இம்மூத்தாளின் தாயாகிய இவள் கண்கள் தாமரையென மலர்க; பாட்டியின் கண்கள் அம்பென மிளிர்க” என்னுங் கருத்துத்தோன்ற,

கூத்தாண் முகத்திரண்டு கூர்வேல்கள் கூத்தாடன்
மூத்தாண் முகத்தின் முழுநீலம்—மூத்தாடன்
அன்னை முகத்தி லரவிந்த மன்னைதன்
அன்னை முகத்திலிரண் டம்பு. (தமிழ்நாவலர் சரிதை)

என்று பாடி அவர்கள் விழிபெறச் செய்தனர்.

இங்ஙனம் பாடிய புலவர் வாக்கு விசேடத்தால் அந் நால்வருக்கும் குருடுநீங்கிக் கண்தெரிந்தன. கிழவிகளும் குமரிகளுமாகிய அந் நால்வ

வரும் குருடுநீங்கி இயற்கை யழகு சிறந்த குதூகலத்தால் பொய்யாமொழியாரை முன்னிலும் சிறப்பாகப் பலமடங்கு உபசரித்துப் போற்றினர். இச்செய்தி அவ்வூரெல்லாம் பரவிக் கேட்போர்க்கு அதிசயத்தை விளைவித்தன. அவர்களில் கணிகை மாதர் எழுபதின்மர் புலவருள் பெற்று அவரால் பாடல் பெறவேண்டி ஒவ்வொருவரும் ஆயிரம்பொன் வீதம் எழுபதினாயிரம்பொன் கட்டி ஒரு பெரு முடிப்பாக வெடுத்து வந்து புலவர் பாதங்களில் காணிக்கையாக வைத்து வணங்கித் தங்கள் கருத்தை வெளியிட்டனர். புலவர் அவர்களது உண்மை யபிமானத்திற்குப் பெரிதும் களித்து அம்மங்கையரது அழகு, குலம், கொடை, கௌரவம் ஆகிய இவை யெல்லாம் நன்கு விளங்கும்படி,

"வாசனை பொருந்திய தாமரைமலரில் வசிக்கின்ற இலக்குமியை ஒத்த அழகுடையவரும், காளையார் கோயிலென்னுந் தலத்தில் எழுந்தருளி விளங்கும் சிவபெருமானுக் குரிய மக்களெனச் சிறப்பித்துச் சொல்லப்பட்ட வருமான (உருத்திர கணிகையர்) எழுபது பெயர்களும் உலகத்தில் யாசிக்கப் பட்டவர் கைகளின் மேல் தமது கைகளை நீட்டுவார்கள். உலக பரிபாலனஞ் செய்யும் அரசர்களின் மேல் தமது கால்களை நீட்டுவார்கள்" என்னுங்கருத்துத் தோன்ற,

"வாச மலர்மடந்தை போல்வார்வண் கானப்பேர்
ஈசன் றன் மக்க ளெழுபதின்மர்—தேசத்
திரவலர்மே னீட்டுவர்கை யீண்டுலகங் காக்கும்
புரவலர்மே னீட்டுவர்பொற் கால்"

என்றுபாடி அவர்களைக் களிப்பித்தனர்.

(தொடரும்)

சி. கு. நாராயணசாமி முதலியார்,
கோயமுத்தூர்.

---

## ஆராய்ச்சி.

ஆராய்ச்சி என்பது தேடுகை என்னும் பொருளதாம்.

ஆராய்ச்சி எனினும், தேடுகை எனினும், விசாரம் எனினும், சோதனை எனினும் ஒக்கும்.

கவனம் என்பதும் இப்பொருளையே குறிக்கும். கவனம் உற்று நோக்குதல் என்னும் பொருளுடையதாகக் காணப்படினும், உற்று நோக்குதலாவது நாம் ஒரு வஸ்துவைச் சாமானியமாய்ப் பார்த்து அஃது

யாதாயிருக்கலாமென அதன் விசேட வடிவத்தை அறியவிரும்பி நமது மனதை அவ்வஸ்துவின்பாற் செலுத்தி நிறுத்திச் செய்யும் ஆராய்ச்சியே யாகின்றது.

இவ்வாராய்ச்சியானது, மன மொழி மெய்களாகிய முக்காரணங்களிடத்தும் நிகழக்கூடியதோர் காரிய விசேடமாயினும், மனதே இக்காரிய நிகழ்ச்சிக் குரிய விசேட ஸ்தானமாகும். மற்றைய காரணங்கள் அதாவது ஞானேந்திரிய கருமேந்திரியங்கள் புறப்பொருளாராய்ச்சியின் கண் ஓரோர் காலத்துமாத்திரம் மனதிற்குச் சககாரியா யிருப்பனவாம்.

ஜீவ கோடிகளுக்கு இகபர வின்பங்களை அடைவிக்கா நின்ற எந்த அறிவுண்டோ, அதன் வளர்ச்சிக்குச் சாதகமாயிருக்கும் வண்ணம், ஜீவர்கள் பால் இயல்பாய் அமையும்படி பரம கருணாநிதி ஆகிய பரமேசுவரனால் சிருட்டித்தருளப்பட்ட அரிய செல்வம் இவ்வாராய்ச்சி ஒன்றேயாம்.

இது ஜீவர்களின் மனோதத்துவத்தின் காரிய விசேடமாகும். இக்காரிய விசேடத்தினாலேயே மனமானது, அறிவு அதாவது ஞானம் என்னும் பெரிய பெயரை அடைந்து ஆன்மாக்களின் அரிய பெரிய நிலைமைக்கு நேர் சாதனமாகின்றது.

ஆராய்ச்சி என்னும் மனோதத்துவத்தின் காரியமானது ஆன்மாக்களிடத்து இயல்பா யுள்ளதென்பதை நம் சிறுகுழந்தைகளின் நடவடிக்கைகளைச் சற்று உற்று நோக்கி வருவோமாயின் நன்கு காணலாம்.

சிறு குழந்தைகள் எதைக்காணினும், இஃது என்ன? யாருடையது? எங்கிருந்து வந்தது? இங்கேன் வந்தது? எப்படிச் செய்யப்படுவது? இதன் உபயோகமென்ன? என்னும் பொருள்படக் கூடிய பல வினாக்களைத் தம் மழலைச் சொற்களால், நாம் விடைபகரச் சலிப்பினும் வினவச் சலியாதிருப்பதைக் காண்கின்றோமன்றோ.

இதுவுமன்றி ஆடும், பாடும், ஓடும் யந்திர விளையாட்டுக் கருவிகளைக் குழந்தைகளிடம் கொடுப்பின், அக்கருவிகளோடு விளையாடி உல்லாசப்படுவதிலும், அவைகளைச் சிதைத்தேனும் அவைகளின் சூத்திர சூக்ஷ்மங்களை யறியத் தேடுவதிலும் குழந்தைகட்குள்ள ஊக்கத்தையும் காணலாம்.

உண்மையை அறிய வேண்டுமென்னும் விருப்பமே ஆராய்ச்சியில் நம்மைத் தூண்டுவதாகும். இவ் விருப்பம், மனிதருக்குக் குழந்தைப் பருவமுதல் இயல்பாகவும், அக்கறையாகவும், இன்பமாகவுமிருக்கின்

றது. இதற்குக் குழந்தைகளின் மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளே சாக்ஷியாகும்.

இவ்வாராய்ச்சியானது, மனிதரிடத்து மாத்திரம் விசேடமாகக் காணப்படுகின்றது. பசு பக்ஷியாதிகளிடத்தும் ஒரோவழி இது காணப்படினும் அவைகளிடத்து இவ்வாராய்ச்சி பூரணப்படுவதில்லை.

பசு பக்ஷியாதிகள் ஓர் அபூர்வ வஸ்துவைக் காணின், அதனால் தமக்கு அபாயம் ஏதேனும் ஏற்படக்கூடுமோ என்றாவது அல்லது ஆகாராதிகளுக்கு உபயோகப் படுமா என்றாவது சிலபோது உற்று நோக்கும். பிறகு அதனால் நயநஷ்டமொன்றும் புலப்படாவிடின், அவ்வளவில் அவைகளின் பால் எழுந்த அறிதல் வேட்கைவடிவ அக்கறை நீங்கி ஆராய்ச்சி நின்றுவிடும். இதனை அம்மிருகம் பறவை முதலியவைகளின் செயல்களைக் கவனிப்போமாயின் அறியலாம்.

அதேவஸ்துவை ஓர் மனிதன் காணின் அதனால் நயநஷ்டமொன்றும் அப்போது புலப்படாவிடினும், அவ்வஸ்து யாது? அது எதற்காக எவரால் எவ்வாறு இவ்விடம் வந்தது? அதன்குணம் யாது? என்பனவாதி ஆராய்ச்சிகளைச் செய்கின்றான்.

மிருகாதிகளுக்கு ஆகாராதிகளில் எப்படியோ அப்படியே மனிதனுக்கு ஜிஞ்ஞாசை யதிகம்; அதாவது அறியவேண்டுமென்னும் விருப்பமதிகம்.

ஆதலினாற்றான் ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம் இவைகளில் மாத்திரம் பிரவர்த்தியை உடைய மனிதன் பசு பக்ஷியாதிகளுக்குச் சமானமெனப் பெரியார் கூறினர்.

இவ்வாராய்ச்சியானது பல வேறு வகைப்படினும், அவையாவும் வைதீகம், இலௌகிகம் என்னும் இருவகையு ளடங்கும். வைதீக ஆராய்ச்சி முக்கியம், கௌணம் என இருவகைப்படும். ஜீவேசுவர ஜகதாராய்ச்சி முக்கியமாம். அதற்குச் சாதனரூபமாகிய கருமகாண்ட, உபாசனா காண்ட ஆராய்ச்சி கௌணமாம். முக்கிய வடிவ ஞானகாண்ட ஆராய்ச்சியானது, ஞானோற்பத்தி வாயிலாய் வீட்டின்பத்திற்குச் சாதனமாம். கௌண ஆராய்ச்சியானது, நிஷ்காம கருமோபாசன அனுஷ்டானவாயிலாய் மனத்தூய்மைக்கும், ஒருமைக்கும் சாதனமாம். கருமகாண்ட உபாசனாகாண்ட ஆராய்ச்சியால் அனுஷ்டிக்கப்படும் கருமோபாசனைகள், காமியரூபமாய் அனுஷ்டிக்கப்படின் அறம் பொருள் இன்பங்களைப் பயப்பதாய், லௌகிகத்தன்மையை அடைகின்றது. அறம்

பொருளின்பங்களைப் பயக்கும் இலௌகிக ஆராய்ச்சியானது பல வேறு வகைப்பட்டு, உலக அறிவை வளர்வித்து நிலவுதலைப் பார்க்கின்றோம். மனிதரின் அறிவு ஆராய்ச்சியால் வளர்தற்குரியதும், எல்லை அற்றதும், எவ்வளவுக் கெவ்வளவு ஆராய்ச்சியில் தலைப்படுகின்றாரோ அவ்வளவுக் கவ்வளவு விருத்தியாகும் தன்மையது மாம்.

இலௌகிக ஆராய்ச்சியில் குன்றாத ஊக்கத்தை யுடைய மேலைத் தேசவாசிகளிடத்து, எத்தனை ஆச்சரியகரமான காரியங்கள் நிகழ்வதை நாம் அறிகின்றோம். ஆராய்ச்சியாலன்றோ நீராவி என்னும் வேதாளமும், மின்சாரமென்னும் மகா பூதமும் அவர்களால் அடிமையாக்கப் பட்டன. அதாவது இவ்விரு மகாசக்திகளும் அவர்களால் கையாளப்பட்டு வருகின்றன.

ஆகையால் அறிஞர்களே! நம் வாழ்நாள்களைப் புகழ், பொருளின் பங்களோடும், அறத்தோடும் கூடியதாகச் செய்தற்பொருட்டு, ஆராய்ச்சி என்னும் சிறந்த சாதனத்தைத் தகுந்த முறையில் உபயோகப்படுத்தி மேன்மை அடைவோம்.

(வரும்.)

இதோபதேசி.

---

## புகழேந்தி.

### உண்மைச் சரிதம்.

இதுவரை நமது புலவரைப்பற்றி எங்கும் வழங்கிவரும் கதைகளை எல்லாம் தெரிந்துகொண்டோம். இனி அவற்றுள் எவ்வளவுதூரம் உண்மை என்பதை ஆராயவேண்டாவா?

புகழேந்தியார் பொன்விளைந்த களத்தூரில் வேளாளர் மரபில் பிறந்தனர் என்பதைப் பற்றி நாம் சந்தேகங் கொள்ளவேண்டுவதில்லை. புகழேந்தி செங்கலங்கை வடுகநாத முதலியார்பால் வளர்ந்தார் என்றும், அம்முதலியாருடைய பிள்ளைக்கும் நமது புலவர்க்கும் மிகுந்த நேசம் உண்டென்றும் கூறும் கதையை நாம் நம்புதற்கில்லை. ஏன் என்றால், அக்கதையில் புகழேந்தி பாட்டென வருபவை எல்லாம் அவரது பாடல் போல ஒருசிறிதும் தோன்றாமையால் என்க. அவ்வாறு வடுகநாத முதலியார் வளர்த்திருந்தால் அவரைப்பற்றி நளவெண்பாவில் கூறாமற் போவாரோ? ஆனாலும், அக்காலத்தில் புலவர்கள் எல்லாம் எவரேனும்

ஒரு செல்வனை ஒட்டியே படித்து வந்தனர் என்ற உண்மையை இக் கதை குறிக்கின்றது என்பதை எவரும் மறத்தலாகாது.—பிறகு புலவர் ஆரியசேகரனிடம் போயினர் என்று மற்றோர் கதை கூறுகின்றது. அவர் போனமை உண்மையே ஆயினும், பொய்யே ஆயினும், தமிழ் நாடு அமையால் இல்லை என்பதையும், வடதேசத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் போக்குவரவு அதிகம் இருந்தது என்பதையும் ஒருவாறு ஊகிக்கலாம். கம்பரும் பிரதாபருத்திரனிடத்தில் போயிருந்தாரென ஒருகதையும் வழங்குகிறது — பின்னர் பாண்டியனிடத்திற்கும் புகழேந்தியார் போயினராம். பாண்டியனிடத்தில் இருந்தார் என்று பாண்டிமண்டலச் சதகமும் புலவர்புராணமும் கூறுகின்றன. இவற்றை நாம் பொய் எனக் கொள்ளக் காரணம் ஒன்றும் இல்லை. ஆனால் தாம் நளவெண்பா பாடிய காலத்தில் பாண்டியனுக்குப் பகைவனான சோழனிடத்தில் இருந்தமையால் பாண்டியனைப்பற்றி நளவெண்பாவில் கூறாது விடுத்தார். விக்கிரம சோழனிடத்தில் சென்று அவன் தேவிக்கு ஊடல் தீர்க்கப் பாடல் பாடினர் எனத் தமிழ் நாவலர் சரிதை கூறுகின்றதே, நமது கதையின் பிரகாரம் விக்கிரமன் மகன் காலத்தில் அல்லவோ அவர் வந்தார் என்றால் கூறுவோம். அபயன் காலத்திலேயே பாண்டியநாடு தலைசாய்ந்து பல பாண்டித் தலைவரால் ஆளப்பெற்றுவந்தது. அப்போது அபயன் அவர்கள் எல்லாம் தலை எடாப்படி அவர்களது அடத்தை எல்லாம் அடக்கிய போது புகழேந்தி பாண்டியனிடத்தில் இருந்து சோழநாட்டிற்கு வந்திருக்கலாம். விக்ரமனது தந்தையாகிய அபய குலோத்துங்கனது காலத்திலேயே புகழேந்தியார் சோழநாட்டை அடைந்தார் என்பதை "இன்னங் கலிங்கத் திகல்வேந்தர்" என்ற பாடலும், "தென்னவன் தென்னர் பெருமான்" என்ற பாடலும் நிலைநாட்டுகின்றன. அப் பாடல்கள் அபயனை அன்றோ குறிக்கின்றன? இவ்வாறு கொள்ளாது குலோத்துங்கன் கலியாணத்தின்போது தான் வந்தார் என்று கொள்ளுதற்குச் சரியான காரணம் ஒன்றும் காணக்கிடைக்கவில்லை—அக்காலத்தில் பாண்டியர்கள் இலங்கை மன்னரோடு நேசங்கொண்டு சோழரை வெல்ல எண்ணி இருந்தனர் என்பதைச் சரித்திர வாயிலாக நாம் அறிகிறோம். ஆகையால் புகழேந்தியார் இலங்கை நாட்டிற்குத் தூதாகச் சென்றிருக்கலாம். ஆனால் புகழேந்தியார் பிடித்த பாம்பை மயில் விடும்படி பாடியது எனவழங்கும் பாடலை அவர் பாடியதாக நாம் நம்புதற்கில்லை — அயன்றைப்பதி சடையன் என்றவரிடம் பரிசுபெற்று, புகழேந்தியார் ஆற்றுப் படையாய் ஒரு பாடல் பாடியதாகத் தெரிகிறது. ஆனால் அந்தப்பாடலைக் கழைக்கூத்தர் பாடியது என வேறுசிலர் கூறுவதால் இக்கதையை நாம்

நம்பவில்லை. பிறகு சோழநாடு வந்து சேர்ந்து, கொற்றந்தைக் கோமான் செஞ்சியர் கோன்மேல் ஓர் கலம்பகம் பாடினாராம். இதனை,

"காரார் களந்தைப் புகழேந்தி சொன்ன கலம்பகத்தின்
நேராது தையும் படியென்ற பாடலின் நேரியர்கோன்
சீராகச் செப்பிய நற்பாடல் கொண்டவன் செஞ்சியர்கோன்
மாராபி ராமனங் கொற்றந்தை யூர்தொண்டை மண்டலமே."

எனவரும் தொண்டைமண்டலச் சதகச் செய்யுளால் உணரலாம். "ஒட்டக்கூத்தர் விக்கிரமசோழ னுலாவின்கண், அச்சோழன் படைத்தலைவர், அமைச்சர், சிற்றரசர், மண்டலிகர் எனப் பலர் இருமருங்கும் மொய்த்திண்டத் திருவுலாப் போந்தான் எனக் கூறுமிடத்து அப்படைத்தலைவர் முதலியோரை வரிசைப்படவைத்துரைக்கின்றனர்; அவர்கலிங்கம்வென்ற தொண்டைமான், முனையர்கோன், சோழகோன், மறையோன் கண்ணன், வாணன், காலிங்கர்கோன், செஞ்சியர்கோன் காடவன், வேணாடர்வேந்து, அனந்தபாலன், வத்தவன், சேதிநாடன், ஆனைகாவலன், அதிகன், வல்லவன், திரிகர்த்தன், மல்லவன், கோசலன், மாகதன், மாளுவன் வில்லவன், கேரளன், மீனவன், பல்லவன் என இவராவர். இவருட் புகழேந்தியாரால் கலம்பகம் பாடப்பெற்றோன் செஞ்சியர்கோன் காடவன் என்பானவன். இது புகழேந்தியாரும் செஞ்சியர்கோனும், விக்கிரம சோழனும் ஒருகாலத்தவராதலால் ஆய்ந்தறியத்தகும்.

"... ... ... ... கடியரணச்
செம்பொற் பரணச் செறியிஞ்சிச் செஞ்சியர்கோன்
கம்பக் களியானைக் காடவனும் ... "

என அவ்வுலாவிற் கூறப்படுதலால், இவன் செஞ்சிக்கண்ணே உயர்ந்த வலிய அரணொன்றமைத்து வாழ்ந்தோன் என்பதும், காடவர்குடியினன் என்பதும் அறியப்படுவன. காடவர் என்பது பல்லவர் வகுப்பினர்க்கு ஒரு குடிச் சிறப்புப் பெயர். கொற்றந்தை என்பது அவன் இயற்பெயர் போலும். புகழேந்தியார் அக்கலம்பகத்து,

"தையும் படியே நங்கொற்ற நங்கோன் செஞ்சி வரைமீதே
ஐயம் பெறுநுண் ணிடைமடவாய் அகிலின் றூப முகிலொன்று
பெய்யுந் துளியோ மழையன்று பிரசத் துளியே பிழையாது
வையம் பெறினும் பொய்யுரைக்க மாட்டார் தொண்டை நாட்டாரே"

எனப் பாடுதலாற் செஞ்சியர்கோனுக்குக் கொற்றன் என்பதும் பெயராம் எனத் தெரிகின்றது." செந்தமிழ் பகுதி 2. பக் 400-401.)

(தொடரும்)

தென்பட்டினம் - மீனாக்ஷிசுந்தரன்.

## உருத்திராக்கம். (ஔஷதகுணம்.)

மகிமை மிகவுள உருத்திராக்ஷத்தைப் பற்றி நமது தொன்மையான சாஸ்திரங்களில் பொதுவிதியாலும் சிறப்புவிதியாலும் விசேஷித்துக் கூறியிருப்பது உலகமறிந்ததே. ஆகவே அதை விடுத்து உருத்திராக்கத்தின் வைத்திய முறைகளைப்பற்றி, குடும்ப ஔஷத வகையில் நமது முன்னோர்களின் அநுபவங்களிற் சிலவற்றைக் கீழே குறிப்பிடுதல் பொதுநலப் பிரயோஜனமாகும்.

நன்றாய் முற்றித் தேர்ந்ததும். கூடியவரையில் பருமனுயுள்ளதும், பார்வைக்கு மஞ்சள் கலந்த செம்மை நிறமானதும், இழைத்துப் பார்த்தால் தங்கச் சாயலைத் தருவதும், சுகந்த மணமுடையதும், சீக்கிரம் தேய்வுபடாமல் அழுத்தமாயிருப்பதும், கையில் எடுக்கும்போதே கனதியாய்க் காட்டுவதுமாகிய உத்தம ருத்திராக்கமே ஔஷத இனங்களில் சேர்ந்து பெரும்பயனைத் தருவது.

நமது ஒப்புயர் வற்ற ஆயுர்வேத முறைகளில் “செத்தபிணம் எழுந்து குந்தும்” என்று உறுதிகூறியுள்ள உன்னத திவ்விய ஔஷதங்களிலும், இறுதிக்காலத்தில் பேச்சைத் தடுத்துச் சுவாசத்தை மறிக்கும் (கோழை) கஷ்ட கப ரோகத்தை நீக்கிக் கோழையை வெளிப்படுத்த உபயோகிக்கும் “கண்டௌஷதம்” என்னும் “கபமிருத்து” முறைகளிலும் சேர்க்கப்பெறும் முக்கிய வஸ்துக்களில் இந்த ருத்திராக்கம் முதன்மையானது. இன்னம் இதன் குணங்கள் அநந்தம். இதைப்பற்றி நமது தேரைய மகாமுனிவர்,

**வெண்பா**

“நீருமதி தாகத்தை நீங்காமுத் தோஷத்தை
ஆளும்விக்கல் பித்தத்தை யாற்றுங்காண்—நாளு
மிருத்திரா மற்கபத்தை வீட்டுமே நல்ல
உருத்திராக் கத்தின்வலி யுன்.”

என்று சுருங்கக்கூறி விளங்கவைத்துள்ளார். இதையே “என்போன் பொதிகைமுனி” என்ற தன்வந்திரி பகவான் வாக்குப்படி, தன்வந்திரியாரின் பேரப்பிள்ளையாகிய அகஸ்தியமகாமுனீந்திரர்,

**செய்யுள்.**

“ஆமப்பா வாதசுரம் இருபத்திரண்டு
அக்கினியாம் பித்தசுரம் இரண்டுபத்து

தூமப்பா சேத்துமசுரம் பத்துப்பனிரண்டு
சுரங்களறு பத்துநா லுடனேஜன்னி
வாமப்பா பெருந்தாகம் வாய்குளறுங் கபமும்
வளர்கின்ற திரிதோஷம் விக்கலுடன்பித்தம்
காமப்பா விஞ்சிரசம் கியாழவகை தன்னில்
கலந்திய ருத்திராக்கம் கலங்கும்வல்வினையே."

என்று அநுபான விசேஷங்களால் அநந்தவியாதிகளைப் போக்கலாமென அறுதியிட்டுக் கூறுகின்றார்.

சாமதேனுவை முன்னிட்டு வஷிஷ்டமகா முனிவருடன் போர் புரிந்தவரும், அதே காரணத்தால், அரசையும், அரச போகங்களையும், இராச்சியத்தையும் வெறுத்தவரும், அரசபலம் பலமல்ல, தபோபலமே அதாவது தெய்வபலமே பலமெனக் கண்டு, தவக்கோலங்கொண்டு, எண்ணற்கரிய வைராக்கிய சாலியாய், பல விக்கினங்களினிடையே தொடுத்த காரியத்தைமுடித்துப் பிரமசிருஷ்டிக்குப் பதில் சிருஷ்டிசெய்து, புல்லும் பூமியும் உள்ளவரையில் சந்திராதித்தர் பிரகாசிக்கும் இடமெங்கும் தன் பெயர் நிலைக்கச்செய்தவருமாகிய விசுவாமித்திர முனிவர்,

அகவல்.

"வாதம் பித்தம் வளருஞ் சேத்மம்
சூதுசெய் தொந்த சுரங்களத் துடனே
முறைமுறை மாறி வருசுரம் பலவும்
வரைமுனி சொன்ன வகைபல ஜன்னி
கதிமாறு விக்குங் கனத்தமுத் தோஷம்
சதிசெய் கின்ற சண்டாள கபமும்
தாங்காத விக்கல் தவித்திடும் வாந்தி
நீங்காத தாகம் நிலைவழி பித்தம்
இவ்வழி யேவரு மெல்லாப் பிணியும்
அவ்வழி விட்டே யகன்றிட வேண்டின்
பத்தரை மாற்றும் பசும்பொன் னிறமாய்
உத்திராக் கத்தை யுகந்ததா யெடுத்துப்
பிணியிலா மங்கையர் பெருந்தனப் பாலில்
மணமுள தேனில் மற்றுங் கியாழத்தில்
அநுபான வகையில் அளவா யிழைத்து
இனமாய்க் கொடுத்திட இறங்கிடு நோய்கள்
சூக்கும முறையிது றொல்லுல கோர்க்கு

ஆர்க்கும் பண்டித மவரவர் செய்திட
ஆயத்து வேளையில் அதுவே மருந்தாய்
தாபத்தைத் தீர்த்துத் தணித்திடும் பிணியைச்
சஞ்சீவிக் கொப்பாந் தனித்தருத் திராக்கம்
அஞ்சலி செய்தே யவிழ்தமாய்க் கொள்வீர்."

என்று லோகோபகாரங் கருதி வெளியிட்டிருக்கும் அருமை, அநுபவசாலிகளுக்கு அளவிலா ஆனந்தத்தை யளிக்கும். மேல்காட்டிய மேலோர் வாக்கியங்களால் ருத்திராக்கத்தின் குணவிசேஷமும், அதனிடத் தடங்கியுள்ள ஔஷதத் தன்மையும், அதை உபயோகிப்பதால் உண்டாகும் பெருமிதமான நன்மையும் தெள்ளிதின் விளங்கும்.

மேல் விவரித்துள்ள ரோகங்களால் அதிக துன்பமுண்டாகி, ஆபத்தை விளைக்குமோ வென்னும் பயங்கரநேரத்தில், அநுபவசாலிகளாக உத்தமவைத்தியரும் கிடைக்காத அவசர சமயத்தில், எவ்வித பயமும் சந்தேகமுமின்றி உருத்திராக்கத்தை மேல் விவரித்துள்ளபடி பார்த்தெடுத்து, தேனிலாகிலும், முலைப்பாலிலாகிலும் இஞ்சி சுரசத்திலாகிலும் இழைத்து உள்ளுக்குச் சாப்பிடச்செய்ய, எவ்வித ஆபத்தும் நீங்கித் தற்கால சுகத்தைக்கொடுத்துப் பேருதவிசெய்யும். வைத்தியசாஸ்திர அப்பியாசமுடையோர் அந்தந்த ரோகங்களுக்குரிய அநுபானங்களில் சேர்த்துக்கொடுக்க அதியாச்சரியமான குணம் தருமென்பது சொல்லாதமையும்.

அதிகாலையில் ஸ்நானம் செய்து ஆறுமணிக்குள், தேனில் ஒரு களவு இழைத்துப் பிரதிதினமும் சாப்பிட்டுக்கொண்டுவர, அதனால் க்ரோ ரோகங்களுக் கிடந்தராமல் தேகத்தை வச்சிரகாயப் படுத்திக்கொள்ளலாம். இதன் அநுபான விசேஷங்களையும் உபயோக விவரங்களையும் சாவகாசம் நேர்ந்தபோது எழுதி வருவாம்.

அ. வேங்கடாசல முதலியார்,
ஆயுர்வேத வைத்தியர்,
திருவண்ணாமலை.

---

## வைராக்கியப் பிரகரணம்.

(வெண்டாமரை சு, இதழ் க0, 239-ம் பக்கத் தொடர்ச்சி.)

மானசன்.—நண்ப! நயமுடன் நீர் நவின்றதைக் கேட்டவுடன் இவ்வுலக சுகம் இயாவும் இழிவுடையதென்று இகழ்ந்து விட்டேன். ஆயினும், இடம் வேண்டுவ தவசியமே அன்றோ?

விவேகன். — அன்ப! நீ அறியாமையையே ஆபரணமெனக் கொண்டு, விடத்தகுந்த இடத்தையும் வெறுத்துத் தள்ளாது, இதுவே என்வீடு, இதுவே என்காணி என மண்ணை எண்ணி மதியிலா மாக்கள் போல மண்ணுய் மடிகின்றுய். இதுமாத்திரமா, இவ்வாறு யாதொன்றை யாதொன்றை இச்சித்தனையோ அந்த அந்த மயமாய் நின்றே அழிந்தனை; இவ்வாறு இறந்தும் பிறந்தும் இத்துன்பங்களிலேயே இடையரு திருக்கவும் விரும்புகின்றுய். இது என்!

மானசன். — நீர் நவின்றவழி எல்லாவற்றையும் விடுத்தேன். இனித் தவம் பண்ணற்குத் தக்கதோரிடமே வேண்டுவனென்றுல், அந்த இடமும் வேண்டாவென்கின்றீர். இது என்!

விவேகன். — அன்ப! துன்பத்திற் கிடமாயுள்ள இவ் வுடம்பே நமக்கு எப்பொழுதும் இடமல்ல என்பதை, "குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே உடம்போடுயிரிடை நட்பு" என்னும் இவ் வமுதமொழியினுல் ஆசிரியர் திருவள்ளுவர் கூறியிருப்பாராயின், இவ்வுடம்பிற் கிடமாயுள்ள இம் மண் நம்மிடமாகக் கொள்ளுந் தகுதியுடையதாமோ? கூறுக.

மானசன்.—நண்ப! நீர் கூறியாங்கு இயாவும் உண்மையே, ஆயினும் ஓரையம் நிகழ்கின்றது. என்னை யெனின், இவ்வுடம்பு நமக்கு என் எப்பொழுதும் இடமாதலில்லை என்பதே.

விவேகன்.—அன்ப! நன்று வினவினுய்! நாமோ சேதனமாய் அருவமாய் நித்தமா யிருக்கின்றேம். சரீரமோ அசேதனமாய் உருவமாய் அநித்தமா யுள்ளது ஆகலின் எப்பொழுதும் இடமாதலில்லை.

மானசன்.—நண்ப! அவ்வாருயின் சிலநாளைக்கேனும் இச்சரீரம் நமக்கு இடமாக இருக்கின்றதே, அது எதனுல்?

விவேகன்.—அன்ப! அவ்வாறு சிலநாளைக்கு இடமாக இச்சரீரம் இருப்பது வினைவயத்தாலேயே.

மானசன். — நண்ப! பின் இச்சரீரம் எதனுடைய இடமாவுள்ளது.

விவேகன். — அன்ப! இச்சரீரம் எப்பொழுதும் மிகத்துயரத்தையே செய்துகொண்டிருக்கும் வாதம், பித்தம், சிலேத்துமம் ஆம் மூன்றற்கே இடமாவுள்ளது. இதை "நீங்கருந் துயர்செய் வளிமுதன் மூன்றனிலையுளே னவைதரந் திடுமுன், வாங்கிநின் றனிவீட் டுறைகுவான் விருப்பி வந்தன னின்குறிப்பறியேன்" என்ச்சீரிய சிவப்பிரகாசர் சிறப்புறச் சாற்றியமையானும், "புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்

பினுட் டூச்சி லிருந்த வுயிர்க்கு" எனத் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் திருவாக்கானும் அறிதி.

மானசன். — நண்ப! நீர் கூறியவாற்றால், இம்மண் இடமல்ல வென்பதுணர்ந்து விடுத்தேன். அறிவு சொரூபமாய் நித்தமாய் உள்ள இடம்யாது? இசைத்திடுக.

விவேகன்.—அன்ப! அமைவுடன் கேள். அரவாபரண னாகிய அரனது திருவடிகளே அறிவு சொரூபமானது, நித்தமானது. ஆகலின் உயிர்கட்கெல்லாம் அடையுமிடமாகிய அதுவே நமதிடமென்றறிதி.

மானசன்.—நண்ப! நீர் கூறியது கொள்ளத்தகுந்தது ஆகலின் சிவனது திருவடிகளே சிறந்த இடமெனக் கொண்டேன். இனிப் புகழ் விரும்பத் தகுந்ததென் றெண்ணுகின்றேன்.

விவேகன்.—அன்ப! நீ விரும்பும் புகழ் அழியத் தகுந்தது என் னும் அதனது உண்மைநிலையை விசாரித் தறிந்தாயில்லை. ஆதலின் அப் புகழை விரும்புகின்றனை. நீ இச்சரீரத்தை விட்டு வேறொரு சரீரத்தை அடைந்தால் (மறுபிறப்பெடுத்தால்) அத்தருணம் இதன்கண் வந்த புகழ் அதன்கண் வந்து பொருந்துமோ! அன்றி முற்பிறப்பில் இன்ன நற் புகழை அடைந்திருந்தேன் என்றறிந்திடுவையோ! அல்லது யாவரா லேனும் இவன் முற்பிறப்பில் இன்ன புகழுடையனா யிருந்தான் என்று சொல்லத்தான் படுவையோ! தெரிந்திருக்குமாயின் அறிவித்திடுக.

மானசன்.—நண்ப! இது என்ன இவ்வளவு மூடனாக என்னை எண்ணுகின்றனை. இஃதாயினு மெனக்குத் தெரியாதோ தெரிந்து கொள்ளக்கூடியதே.

விவேகன். — அன்ப! சரி சரி. இனிமேல் வரும் பிறப்பு விவ காரம் நினக்குத் தெரிந்துகொள்ளக் கூடுமாயின், முற்பிறப்பு விவகாரம் முற்றும் நினக்குத் தெரிந்திருக்கும் அன்றோ? ஆகலின் முற்பிறப்பின் கண் உன்பேர் யாது, உன் விவகாரம் யாவை, உரைத்திடுக.

மானசன்.—(உரைக்க ஒன்றுந்தோன்றாமல் சிலநேரம் ஊமையை ஒத்திருந்தனன்)

விவேகன்.—அன்ப! உத்தரங்கூறாது காலத்தை அவமே கழிக் கின்றனை, அவ்வாறில்லாது விரைவில் விளம்புதி.

மானசன்.—நண்ப! புகழ்ச்சியோ அழியத்தகுந்தது என்கிறீர். இகழ்ச்சி எத்தகையது அறிவித்திடுக.

விவேகன்.—அன்ப! இதை வேறு கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமோ! வேண்டியதில்லையே. இந்தப் புகழ்ச்சி எத்தகையதோ அத்தகையதே இகழ்ச்சியும்.

மானசன்.—நண்ப! நீர் கூறியவாற்றால் புகழ்ச்சி இல்லை எனப் படுகின்றது. ஆகலின் புகழ்ச்சி இகழ்ச்சி இல்லையோ?

விவேகன். — அன்ப! இப்புகழ்ச்சி இகழ்ச்சிகள் கொள்ளுந் தகுதியன அல்ல ஆகலின், இவை புகழ்ச்சி இகழ்ச்சிகள் அல்ல என்றதே யன்றி, புகழ்ச்சி இகழ்ச்சிகள் இல்லை எனக் கூறவில்லையே.

மானசன்.—நண்ப! அவ்வாறாயின் புகழ்ச்சி இகழ்ச்சிகள் எனப் படுகின்றன எவை?

விவேகன்.—அன்ப! உண்மையாக விசாரிக்குமிடத்து ஒப்பற்ற வீட்டினை அடைதலே புகழ்ச்சியாகும். பிறப்பினை அடைதலே இகழ்ச்சி யாகும்.

மானசன்.—நண்ப! வீட்டினை அடைதலைமாத்திரம் என் புகழ்ச்சி யென்று கூறுதல் வேண்டும். பிறப்பினை அடைதலை என் இகழ்ச்சி யென்று கூறுதல் வேண்டும்.

விவேகன்.—அன்ப! உலகிலுள்ள யாதொன்றையும் விரும்பாது அவ்வீட்டினையே விரும்பி அடைந்தவரும் நித்தியம், அவரது புகழும் நித்தியம். பிறப்பினை அடைந்தவரும் அநித்தியம், அவரது புகழும் அநித்தியம். ஆகலின் வீட்டினை அடைதலைப் புகழெனல்வேண்டும். பிறப்பினை அடைதலை இகழ்ச்சி யெனல் வேண்டும்.

மானசன்.—நண்ப! நீர் கூறியவாற்றால் சிவனது திருவடிகளை அடைதலே சிறந்த புகழெனத் தேர்ந்தேன். தேர்ந்த இதனால் இவ் வநித்தியப் புகழ் வெறுக்கத் தகுந்ததென விடுத்தேன். இனி யான்செய்ய வேண்டுவதென்னை?

விவேகன். — அன்ப! இதுகாறும் நீ புறப்பற்றுவுள்ள உறவு, பொருள், சுகம், இடம், புகழ் என்னும் இவ்வைந்தையும் வெறுக்கத் தகுந்தது என எண்ணுதலும் இல்லாது விரும்பியிருந்தனை. இப்பொழுது விசாரணை முகத்தானே இவ்வைந்தையும் விடுத்தேனென்றாய். விடுத் தனை ஆயின் மேற்கூறிய உறவு, பொருள், சுகம், இடம், புகழ் ஆம் ஐந் தும் இறைவன் திருவடி ஆதலால் அதனை அடைதற்கு ஏதுவாய அருந் தவமே நீ செய்யவேண்டுஞ் செய்கையாம்.

( இன்னும் வரும். )

ச. ஸ்வீ. சிவஸ்வாமி தேசிகர்,

காஞ்சிபுரம்.

## காஞ்சிபுரம் தமிழ்வேதபாராயண சபையின்

### தமிழ்வேதப் பயிற்சியும், உபந்நியாசமும், மூலதனச்சேர்க்கையும்.

---

மெய்யன்பினீர்!

எந்நாட்டினுஞ் சிறந்த நன்னாடாகிய தொண்டைநாட்டுத் தலங்களுட் சிறந்த காஞ்சிபுரம் பிள்ளையார்பாளையம் கிருஷ்ணராயர் வீதி, 52-நெ. ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் மடாலயத்து நிகழும் காளயுக்தி௵ கார்த்திகை௴ 21௳ இத் தமிழ்வேத பாராயணசபை தாபிக்கப்பெற்றது. இச்சபை தாபித்தது, ஸ்ரீ சைவசமயாசாரியராம் நால்வராதியர் திருவருளான் அருளிய தேவார திருவாசகாதிகளை இளஞ்சிறார்க்குப் பண்ணோடு பாடப் பயில்விக்கவும், அத்தேவார திருவாசகாதிகளது மகிமையும், அதனை அருளிய ஆசாரிய மூர்த்திகளது செயற்கருஞ் செய்கையும், அவ்வாசாரிய மூர்த்திகளோடு பயின்றவரும், அவர்களால் விதந்து கூறப் பெற்றவருமாகிய உண்மைநாயன்மாரது உவமையில் சரிதமும், அவர்களியாவருக்குந் திருவருள்பாலித்த இறைவனது லீலா விசேட குணங்களும் ஆகிய இவற்றுள் ஒவ்வொன்றை மாதம் ஒருமுறை அல்லது இருமுறை தகுந்தவர்களால் உபந்நியசிக்கச் செய்யவுமே ஆகும். குறித்த இச்சபையில், அவ்வாறே சில இளஞ்சிறார்க்குத் தமிழ்வேதப் பயிற்சி நடைபெறுகின்றது. அன்றிச் சென்ற மார்கழி௴ 14௳ காஞ்சிபுரம் மண்டபத்தெரு ஸ்ரீமான் ஐ. பொ. முருகேசமுதலியாரவர்களால் விருத்த குமார பாலரான திருவிளையாடற்சரிதமும், காஞ்சிபுரம் ஸ்ரீமத். ச. ஸ்வீ சிவஸ்வாமி தேசிகரவர்களால் தை௴ 4௳ திருநாவுக்கரசருக்குப் பொதிசோறளித்த திவ்ய சரிதமும், மாசி௴ 8௳ செட்டித்தெரு ஸ்ரீமான். தொ. குப்புசாமி ஆச்சாரியார் அவர்களால் அடிமையிற் சிறந்த அப்பூதியடிகளது அருமைச் சரிதமும் உபந்நியசிக்கப்பட்டன. உபந்நியசித்த அவ்வப்போழ்தும் அங்கு வந்திருந்த அன்பர் பலரும் அகமகிழ்ந்தனர். அன்றி இச்சத்விஷயங்கள் என்றும் நடைபெற மூலதனம் சேர்க்கப்படுதல் வேண்டுமென அவ்வப்போழ்தும் வற்புறுத்திச் சொல்லப்பட்டு வந்தன. சொல்லப்பட்டுவந்த மூலதநச் சேர்க்கை விஷயமாக ஸ்ரீமத். ச. ஸ்வீ. சிவஸ்வாமிதேசிகர், ஸ்ரீமான். ஐ. பொ. முருகேசமுதலியார், ஸ்ரீமான். ம. சுப்புராயமுதலியார், ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் மடங் கட்டுவித்த ஸ்ரீமான். கச்சாலை முதலியார் முதலிய அன்பர் சிலர் சிலதினமாகப் பெரிதும் முயற்சித்து வருகின்றனர். (இவ்வாறு இன்னுஞ் சிலரும் முயற்சிப்பாராயின் மிக நலமாம்) இவ்வாறு முயற்சித்து வருகின்றமையின் இதுகாறும் இச்சபையின் மூலதனமாகக் கையொப்பமாக

வும் ரொக்கமாகவும் சேர்ந்த ரூ. 650-0-0. (அறுநூற்றைம்பது) ஆகும். இதோடு அவர்கள்முயற்சியைவிடாது,"உழப்பின் வாராவுறுதிகளுளவோ கழப்பின் வாராக் கையறவுளவோ" என்னும் பட்டினத்தடிகளது பால் போலும் இனிய மொழியைக் கவனித்து மேன்மேலும் முயற்சிப்பார்களாயின் இதுபோன்ற மூலதனம் பதின்மடங்கு அதிகம் சேர்க்கலாம். சேர்த்தபின் இச்சபையின் கருத்தாகிய தமிழ்வேதப் பயிற்சியும் உபந்நியாசமும் நடைபெறச் செய்வதன்றிச் சைவசமயக் கல்வியைப் போதிக்கும் பாடசாலை ஒன்று இச்சபையின் சம்பந்தமாகவே தாபித்து, சமயக்கல்வியை வளரச்செய்யலாம். செய்தால் அப்பாடசாலை ஒன்றேனும் காஞ்சிபுரத்தில் இல்லாக்குறையையும் இல்லாமற் செய்யலாம். அவ்வாறு செய்ய இப்பொழுது நடைபெற்றுவரும் தமிழ்வேதப் பயிற்சியும், உபந்நியாசமும், மூலதனச் சேர்க்கையும் மேன்மேலும் வளருமாறு எல்லாம் வல்ல இறைவனை எப்பொழுதும் இறைஞ்சுகின்றேன். சுபம்.

இங்ஙனம்

கா. பி. மு. கிருஷ்ணசாமி முதலியார்,

காரியதரிசி,

தமிழ்வேத பாராயண சபை,

கிருஷ்ணராயர்வீதி, பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம்.

---

## பிழைதிருத்தம்.

கலைமகள் வெண்டாமரை ௬, இதழ் ௧௦-௧௧, பக்கம் ௨௬௪-ல் "ஈரவஸ்திரம் தரித்தல்" என்னும் வியாசத்தின்கண், "ஈரவஸ்திரம் தரித்தலுக்கு இரண்டு முக்கிய உத்தேசங்களுள" என்பதை "வஸ்திரம் தரித்தலுக்கு இரண்டு உத்தேசங்களுள." எனத் திருத்திக் கொள்ளல் வேண்டும்.

இப்பிழை திருத்தத்தினை உடனே பிரசுரிக்காமைக்குப் பத்திரிகாபிமானிகள் மன்னிப்பாராக.

நூனெறியாளன்.